DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.266/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராஜலட்சுமி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | ராஜலிங்கம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கே.புதுப்பட்டியில் குடியிருந்து 100 நாள் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் ராஜலிங்கம் எனது கணவர். 3 வருடங்களுக்கு முன்பு எனது கணவர் இறந்துவிட்டார் தற்போது உயிருடன் இல்லை. விபத்தில் இறந்து போன நாகம்மாள் எனது மாமியார் முறையாகும். ஆஜர் எதிரி எனக்குத் தெரியும். 23.03.2022 ம் தேதி இரவு 01.00 மணிக்கு அ.சா.1, அ.சா.2 எனது மாமியாருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். தகவல் தெரிந்து சம்பவயிடம் வந்து பார்த்தேன். நான் வந்து பார்த்த போது எனது மாமியாருக்கு தலையில் அடிப்பட்டு காயம் ஆகியிருந்தது.

2. நான் விசாரித்த போது எனது மாமியார் மகாதானபுரத்தில் கரூர்–திருச்சி பைபாஸ் ரோட்டில் பொன்னராசி டவர் அருகே உள்ளது. இரவு 01.00 மணியளவில் எனது மாமியார் பாத்ரூம் செல்வதற்காக கரூர் திருச்சி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சிறுநீர் கழிப்பதற்காக ரோட்டை கடந்த போது அரசு பேருந்து TN 45 3720 என்ற எண்ணுள்ள பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த பேருந்து எனது மாமியார் மீது மோதிவிட்டதாக தகவல் சொன்னார்கள். எனது மாமியாரை திருச்சி GH க்கு கூட்டிச்சொன்றோம். மருத்துவர் எனது மாமியார் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார்

என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் எனது கணவர் ராஜலிங்கத்தின் கையொப்பம் தான். **புகார் மனுவில் உள்ள கையொப்பம் எனது கணவர் ராஜலிங்கத்தின் கையொப்பம்அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது எனக்கு தகவல் சொன்னார்கள் நான் வந்து பார்த்தேன். இறந்து போனவர் எனக்கு என்ன உறவு என்றால் மாமியாராகும்.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 10:50:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.